संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

இந்திய ரிசர்வ் வங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

ஏப்ரல் 26, 2017

## "அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் 150-வது நூற்றாண்டு விழா" வை நினைவு கூறும் வகையில் புதிய ₹ 5 நாணயங்கள் வெளியீடு

இந்திய ரிசர்வ் வங்கி அரசாங்கம் தயாரித்த மேற்குறிப்பிட்ட மதிப்பிலக்க நாணயங்களை விரைவில் புழக்கத்தில் விடுகிறது.

இந்திய அரசு நிதி அமைச்சகம், பொருளாதார விவகாரத்துறை, புதுதில்லியின் பிப்ரவரி 23, 2016 தேதியிட்ட G.S.R.191 (E) எண் கொண்ட அரசிதழில் (அசாதாரண - பகுதி II பிரிவு 3, உப பிரிவு (i)) இந்த நாணயங்களின் வடிவமைப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

**வடிவம்:**

**முன்புறம்:**

நாணயத்தின் இப்பகுதியில் அசோகா தூணின் சிங்க முகமும் அதற்குக் கீழ் **'सत्यमेव जयते'** என்ற வாசகம் இந்தியிலும் பொறிக்கப்பட்டிருக்கும். இதன் இடப்பக்கம் மேற்புறத்தில் **'भारत'** என்று இந்தியிலும் வலப்பக்கம் **'INDIA'** என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும். சிங்கமுகத்தின் கீழ் பகுதியில் " ₹ " என்ற ரூபாய் குறியீடும் மதிப்பிலக்கம் "5" என்பது சர்வதேச எண் அளவிலும் பொறிக்கப்பட்டிருக்கும்.

**பின்புறம்:**

நாணயத்தின் மறுபக்கம் "**புத்தகத்தில் இருந்து வரும் அலஹாபாத் உயர் நீதிமன்ற கட்டிடத்தின் மையப் பகுதி**"-ஐ சித்தரிக்கும் படம் பொறிக்கப்பட்டிருக்கும். **"इलाहाबाद उच्चन्यायालय का 150 वां वार्षिकोत्सव"** என்று தேவநாகரியிலும், "**150th ANNIVERSARY OF ALLAHABAD HIGH COURT**" என்று ஆங்கிலத்திலும் மேற்புறமும் கீழ்ப்புறமும் பொறிக்கப்பட்டிருக்கும். படத்திற்கு வலது புறமும் இடது புறமும் **"1866-2016"** என்று சர்வதேச எண் அளவில் எழுதப்பட்டிருக்கும்.

2011-ஆம் வருடத்திய இந்திய நாணயச் சட்டத்தின்படி, இந்த நாணயங்கள் செல்லத்தக்கவை. ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் இந்த மதிப்பிலக்க நாணயங்களும் செல்லத்தக்கவையே.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிகை வெளியீடு - 2016-2017/2903**